சிரவைக் கௌமாரசபை வெளியீடு.

உ

குருவே துணை.

விளாங்குறிச்சி
ஸ்ரீ சித்திவிநாயகர் மாலை.

ஆசிரியர் :

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்

இவை

விளவை த. ல. சுப்பண கவுண்டர் அவர்கள்

பொருளுதவிகொண்டு

கோயமுத்தூர்

பாரதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1944.

T12998

R003L07

T. 12998

உ

குருவே துணை.

விளாங்குறிச்சி

ஸ்ரீ சித்திவிநாயகர் மாலை.

ஆசிரியர் :

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்

இவை

விளவை த. ல. சுப்பண கவுண்டர் அவர்கள்

பொருளுதவிகொண்டு

கோயமுத்தூர்

பாரதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1944.



ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்,

கௌமார மடாலயம்,

சிரவணபுரம்.

குருவே துணை.

முகவுரை.

சித்தி விநாயகமாலை என்னும் இந்நூற் பெயரானது ஞானமயமாகிய விநாயகப் பெருமானுக்குச் சூட்டும் பிரபந்தமெனவும், சித்தி விநாயகனே என்னுந் திருநாம மகுடத்தை ஒவ்வொரு கவியீற்றினும் அமைத்துத் தொடுத்துள்ள மாலை போலும் பனுவலென்றும் பொருள் தந்து விளங்குகின்றது.

இந்நூலாசிரியர் சிரவணபுரம் கௌமார மடாலயம் சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவித கௌமார சபை ஸ்தாபகாசாரியரும், முத்தமிழிலக்கண கர்த்தராகிய அகஸ்திய முனிவரது கலாமிச அவதார மூர்த்தியுமாகியுள்ள ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகளது மாணுக்கரும், பிரதிநிதியுமாகிய ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகளாவர். இவரது சரித்திர விளக்கம் இவராலியற்றப்பட்டுள்ள பல பல பிரபந்தங்களினும் பரந்து காணப்படுதலால் இதனில் எழுதாது, இம்மட்டில் நிறுத்துகிறேன்.

இந்நூலானது முதலிரண்டடிகள் சொற்சுவை பொருட்சுவை யாதியவற்றால் நிறைவமைந்து படிப்பவர் கேட்பவர் மனத்தைக் கனல் மெழுகொத்து உருகச் செய்ய வல்ல அடிமைத் திறத்தை விளக்கவல்லனவாயும், மூன்றாவது நான்காவது அடிகள் ஸ்ரீ விநாயக புராண சரித்திர சாரங்கமழும் தெளிவமைந்து தமிழ்ப் புலவர் மனங்களை அள்ளிக் கொள்ளை கொள்ளத்தக்க சமயசமரச சமயாதீத விளக்கமிக்க தலைமைப் பரத்தன்மையைத் துலக்க வல்லனவாயும் அமைந்துள்ள தன்மை அன்பர்கள் அறிந்துவத்தற்பாலன.

சோமகாந்தன் என்னும் அரசன் வினவுவதாக, சங்கற்பம் புரிந்தமாத்திரத்தில், அவனுடலிற் பிணித்து, எவ்வகையினும் தீராத தொழு நோயை மாற்றிய மகிமை நிறைந்த புண்ணிய காவியமான விநாயக புராணத்தைத் திட்ப நுட்ப

மமையத் தன்னுளடக்கி மிளிரும் இப்பிரபந்தமானது பாரா யணம் புரியும் மெய்யன்பர்களுக்கு ஒரு கற்பகத் தருவைப் போன்றது என்னில் அது மிகையாகாது.

இப்பிரபந்தத்தின் ஈற்றிலுள்ள கoகூ-வது கவியால் விளாங்குறிச்சி என்ற நகரத்திலுள்ள இலக்குமண சுப்பண கவுண்டரென்னும் கௌமார சபைத்தொண்டர் ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகளது அருளநுக்கிரகப்படி தமது பதியில் தமது புண்ணியப் பொருட் சிறப்பிற் புரிந்து விளங்கும் ஸ்ரீ இட்டசித்தி விநாயக மூர்த்தியின்மீது முன்பு செய்த வாறு புரியும் வண்ணம் இந்நூலாசிரிய சுவாமிகளை வேண்டிக் கொண்டதற்கிசைந்து சிறப்பாயும், மற்றுள்ள கவிகளாற் பொதுச் சிறப்பாயும், பெயர் மாத்திரத்தால் பொதுவாயும் அமைத்துள்ள தன்மை மிக மிகப் போற்றற்பாலது.

இத்தகைய பிரபந்தத்தை வேண்டி இயற்றுவித்து மெய்யன்பர்கள் பாராயணத்துக்குதவும்படி அச்சிட்டுப் புத்தகங்களாக்கித் தமது சிவபுண்ணிய பரோபகாரத் தன்மையான கடமையைச் செலுத்தியுள்ளவரான விளாங்குறிச்சி கௌமாரத் திருவாளர் இலக்குமண சுப்பண கவுண்டர் அவர்களுக்கு ஸ்ரீ பரமசற்குருநாதன் திருவருளால் இகபர சுகபோக பாக்கியங்கள் அனைத்தும் காலக்கிரமத்தில் உண்டாகும்படி அன்னவன்றிருப் பொன்னடித்துணையை என்னகத்தமைத் துன்னுகின்றேனே.

சீராருஞ் சிரவைபொலி கந்தசா மித்தவத்தோன் சிறப்புற்றோங்குந், தாரகச் சூட்டுமணிச் சித்திவிநா யகமாலை தன்னையன்பர், பாராயணம்புரியச் சுப்பணக் கௌமாரன்ச்சிற் பதிப்பித்துள்ளத், தாராள முடன்வழங்கி மெய்ப் புகழும் பெருந்தவமுந் தழைத்திட்டானே.

கௌமார மடாலயம்,
சிரவணபுரம்.
தாரண-வரு
சிங்கரவி.

இங்ஙனம்,
அடியார்க்கடியன்,
சின்னசாமி சுவாமி.

உ

குருவே துணை.



இந்நூலுக்கு பொருளுதவி செய்தவர்

ஸ்ரீ த. ல. சுப்பண கவுண்டர்,

விளாங்குறிச்சி.

உ

குருவே துணை.

சாத்து கவிகள்.

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணாக்கர்

ஸ்ரீ ரங்கமுத்து ஐயா இயற்றியது.

எழுசீர் விருத்தங்கள்.

திருவொடுவாணித் தாயமர்சிரவை சிறந்தகௌமாரர்கள் பஞ்ச, தருநிகரிராமா னந்தவெம்குருதாள் தலைமுடியுளமுடி கொண்டே, கருவுறுபிறவி வேரொடுகளைவோன் கந்தசாமிக் கவி வள்ளல், சருவவன்பர்க்கும் பார்க்கவபுராணஞ் சார மாய்ச் செய்துதந்தானே. (க)

சிரவையெமிராமா னந்தசற்குரவன் றிருவடியகம்புறத் துவக்கும், பரவையார்விளவைச் சுப்பணகவுண்டன் பார்க்கவ புராண சாரத்தைக், கரவிலாப்பொருளா லச்சினிற்பதித்தே கவின்கொள்புத் தகவடிவாக்கிச், சிரவணஞ்செய்தான் தவ மிகப்பிறவி சேர்ந்தமெய்ப் பயன் கைக்கொண்டானே.

சிரவணபுரம் கௌமாரமடாலம்
ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள் மாணுக்கர்
புட்பப்பணி குமாரசாமி ஐயா இயற்றியது.

அறுசீர் விருத்தங்கள்.

ஆறுமுகன் கலைகொள்ளென் ணரியனுங் கந்தகுரு வரும் பாமாலை, வேறுமுகந் தேடியையம் தெளிவதனுக் கலையாமல் விளவையூரி, லாறுமுகங் கொள்ளுமிட்ட சித்திவிநா யக மூர்த்திக் களித்தானன்பில், மாறுமுக மின்றியுள்ளி லோரு மவர்க் கரும்பேறு வருந்தான்மெய்யே. (க)

இட்டசித்தி விநாயகன்றன் பாமாலை யெல்லோரு மிசைத்துவாழக், கட்டமுட னல்வழியி லீட்டியதன் பொரு டன்னைக் களிப்பிலீந்தச், சிட்டளித்த விளவைநகர்ச் சுப்ப ணப்பேர்ச் செல்வவந்தன் சிறப்பாய்வாழ்ந்து, மட்டறுமெய்ப் புகழுடனே யன்னவன்ரு ளீற்றிலுற்று வாழ்கமாதோ. (உ)

தெய்வமே துணை.

உ

குருவே துணை.

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்,

கௌமார மடாலயம்,

சிரவணபுரம்.

உ

குருவே துணை.

சித்தி விநாயக மாலை.

காப்பு.

எழுசீராசிரிய விருத்தம்.

நித்தியவகண்ட பூரணக்குடிலை நிறைபொருளாய்ச்சுகா னந்த, வித்தியற்பெருமான் றிருவருளாடல் விநாயகபுராண சா ரங்தோய், சித்திவிநாய கப்பிரான்மாலை செப்பிடவென்ன கம் புறத்தும், நத்தியவிராமா னந்தசற்குரவ னளினநாண் மலர்ப்பதந் துணையே.

நூல்.

புனம்புகுமுருகோன் றுதித்திடவள்ளிப் பொருப்பி னில்விருப்பமுற் றிசைதாள், மனம்புகுந்திடவேண் டென் முறைக்கிரங்கா வன்மமுற்றிடன்முறை தானோ, கனம்புகுஞ் சவுராட் டிரநகர்ச்சோம காந்தன்சீரன்பர்தஞ் செவியில், தினம்புகும்படிமா வனம்புகுத்திட்ட சித்திவிநாயக மணியே.

முரசியற்றெனிவான் புகுமரசாட்சி முறைநினதடிக்கறு கிட்டுப், பரசியற்றெண்டர் தம்மதுகடைக்கட் பார்வைமாத் திரத்துறு மன்றே, அரசியற்கையின்சீர் சோமகாந்தன்ற னருஞ்சுதனேமகண் டனுக்குச், சிரசியல்பெறச்செப் பிட வருளிட்ட சித்திவிநாயக மணியே. (உ)

எய்திடர்ப்புலன்வாய்ப் பட்டிருஞ்சூறை யெறிதரும் பொத்துளேற் கருட்சீர், பெய்திடநீயெண் ணிலையெனி லெனக்குப் பிறிதொருசார்புள தேயோ, மெய்திடம்பெற்ற வேமகண்டனுக்கு வேந்தன்பட் டாபிடேகத்தைச், செய்தி டத்துணையாய் நின்றருளிட்ட சித்திவிநாயக மணியே. (ங)

எத்தனை தந்தை தாய்நகர்சுற்ற மெத்தனைமனைசுத ருடலம், எத்தனையின்னம் பிறப்பிறப்பென்ன விரங்கடியேற் கிரங் கிடுவாய், கைத்தலம்பற்று மனையுடன்சோம காந்தனை வனம்புகும் வண்ணஞ், சித்தமீதமைந்து செலுத்திடுமிட்ட சித்திவிநாயக மணியே. (ச)

சிரமமுற்றடையிற் கனிநிழலுதவித் தீவினைத்தொடக் குறூ துறலான், மரமனையேன்யா னென்னவுந்துணிவு வந்தி லேனெந்தவா றுய்வேன், உரமருவேம கண்டனுக்காசி யுரைத்தருட்பிருகுமா தவனைச், சிரமநேர்சோம காந்தனைத் திட்ட சித்திவிநாயக மணியே. (ரு)

ஏவினைநிகர்கண் ணாய்வினையெதனுக் கேவினையெனை யென்பேன் றன்னைக், கூவினையாட்கொண் டருளுனக்கடி யேன் குயிற்றுகைமாறுள தேயோ, கோவினைநாடிப் பிருகு மாதவன்வாய் கொண்டுகாமங்கனைப் புரிந்த, தீவினைத்திரண் முற் றுரைத்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (சா)

அருப்பணிவிழியாற் பொருப்பணித்தனத்தா லழன் மெழுகாக்குபு மனத்தைத், திருப்பணிமடவார் வேட்கைமுற் றகலுஞ் சிதேந்திரியத்தகை யருள்வாய், மருப்பணிநின்கோ யிற்கண்வன்பவக்கா மந்தனைமருவவைத் துவப்பில், திருப் பணிவிழாச்செய் திடவருளிட்ட சித்திவிநாயக மணியே. (எ)

ஓர்ந்திடவுன்னைத் துதித்திடப்பணிய வூழ்வினைமறுத் தது பிருகு, கூர்ந்தருண்மொழிநம் பான்றனைவலியன் கொத் தவோட்டிக்கைநீ றெறியப், பேர்ந்தபூதத்தி னோடிறை துயரும் பிரித்தியல்பிரமராக் கதன்வான், சேர்ந்திடத்தெய்வ வடிவருளிட்ட சித்திவிநாயக மணியே. (அ)

உய்கையோராதிவ் வுலகவாழ்க்கையினி லுழலுமென்ற னக்குநின் னருட்சீர், மெய்கைகூட்டியபின் சோதனைபுரியின் மெய்ப்புகழ் யார்க்கும்வாய்ந் திடுமே, பொய்கைநீராடி நின் கதைவினவப் புரவலனியற்றுசங் கற்பச், செய்கையாற்பிணி முற் றறப்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௯)

வசைமுகந்திடச்செ யைம்புலப்பகையை மாற்றிநின்பே ரருட் பெருக்கா, ரிசைமுகந்திடச்செய் திடி லுலகுயிர்முற் றின்பவாரிதியின்மூழ் கிடுமே, நசைமிகவுன்று ளூன்னிலன் புராண நவில்வியாசன்மதி மருட்சி, திசைமுகனுற்றீர் வுறவ ருளிட்ட சித்திவிநாயக மணியே. (௧௦)

நயங்கிளரமுத புஞ்சவான்றமிழா னுளுநின்மெய்ப்புகழ் பாடி, முயங்கியற்பரமா னந்தவாரிதியின் மூழ்குமாறெனக் கருள் புரிவாய், மயங்கியவியாசன் றெளிவுறப்பிரமன் வாய் மலர்மீதமைந் தருளாற், செயங்கிளர்மந்தி ரம்புகலிட்ட சித்திவிநாயக மணியே. (௧௧)

மெய்க்குணவளிக்கப் பொன்மண்மிக்கீட்ட விரும்புவேற் கருள்விருந் தாகிச், சக்குணவகலா வின்புதேக்குனது சகு ணமெய்ப்பிரமநீர் தெரிப்பாய், முக்குணத்துதித்தோர் தவத் தினுக்கிரங்கி முதிரருள்கொடுதொழின் மூன்றுந், திக்குணர் தரவாற் றிடப்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (கஉ)

விரியருட்சித்தி புத்திமத்தியினின் மிளிரருட்சோதி யுன் பாத, தரிசனமொருகாற் காணிலென்சோக தாகமுற்றற் றொழிந் திடுமே, அரியயன்பதினெண் கணங்களண்டங்க ளடங்கலுமமைவிசு வரூப, தெரிசனமளித்துண் டுமிழரு ளிட்ட சித்திவிநாயக மணியே. (கங)

நீறுடனக்க மணிபுனைந்துனையே நினைந்துநெக் குருகு மெய்ப் பத்திப், பேறுறவருள்வாய் பிரமனுன்பாதம் பேணி லன்சிட்டிசெய் திடுகா, ஊறுறக்கண்டுண் ணுடிடத்தோன்றி யுயர்சித்திபுத்தியை நல்கித், தேறுலகியற்றப் புரிந்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (கச)

கருமணங்காட்டு மதன்மலர்க்கணையாற் கலங்கியுண் மயங்குமென் றனக்குப், பெருமணங்கொண்டு துலங்கு மெஞ்ஞானப் பெருக்கமீந்தாண்டரு ளபயம், வருமணங்கினர் தம் முருநலம்புனைந்து மகதிவீணையன்சொல விரும்பித், திரு மணம்புணர்ந்துள் ளின்பமையிட்ட சித்திவிநாயக மணியே.

தீதினின்றகன்ற வொழுக்கமுமேலாஞ் சிறப்புமெற் கருள்புரி யரிதன், காதினின்றுதித்த மதுகயிடவரைக் காது காலுன்னருண் மறந்து, வாதினின்றோடிச் சட்டாக்கரத்துன் மெய் வரங்கொடுவந்திக லவரைச், சேதிமெய்வீர மளித்தரு ளிட்ட சித்திவிநாயக மணியே. (கசு)

ஊற்றியற்பண்பி லூற்றின்பக்கண்ணீ ருன் றிரு மேனியை நனைப்ப, வீற்றிருந்தருளென் னுட்கருநாட வேந்துசெய்மீதுமுக் கலன்மெய்க், காற்றினுற்பிணிதீர்த் துன்னருட்சேவை காட்டுபு தக்கனுமவனைத், தேற்றியம் முனிக்கா ளாக்கிடுமிட்ட சித்திவிநாயக மணியே. (கஎ)

மட்டிலானந்த முன்புடையிருக்க மைந்தனுமடிமையான் சற்று, மெட்டிலாததனி லொட்டிடாதுழன்றே னுவந்தரு ளொப்பில்வல் லாளன், முட்டிலாப்பூசை கொண்டிடையூறு முயன்றதந் தைக்கவன் சூளால், திட்டியாதியமுற் றறப்புரி யிட்ட சித்திவிநாயக மணியே. (கஅ)

தருவளித்திடுமிந் திரத்திருவமெலாஞ் சற்றெனும் பேரின்ப ஞான, மருவளித்திடுமுன் றெரிசனமொருக்கால் வழங்குதியொப்பில்வல் லாள, னுருவளித்தவரைக் கமலைதக்க னென வுய்த்துமற்றவற்குமெய் முத்திக், திருவ்ளித்தருளுங் கருணைதோயிட்ட சித்திவிநாயக மணியே. (கசு)

அருந்தவப்பெரியோ ருட்கணமகலா வகண்டபூரணநிலை யளித்தாள், வருந்தவங்கெடவே வருந்தவக்கமலை மகன்கனு வுண்மைகேட் டுணர்கா, லிருந்தகுண்டினவூ ரினரிறையி லா யிபங்கொடுகொணவந் திடுவார், திருந்துதக்கனைக்கொண் டிடவருளிட்ட சித்திவிநாயக மணியே. (உ௦)

வாக்கிலொன்றுரைத்து மனத்திலொன்றெண்ணும் வஞ் சகருறவினை யறவே, நீக்கியாண்டருள்குண் டினநகராளு நிருபனுய்முக்கல முனிவன், வாக்கியத்திருமை நலம்பெறு தக்கன் மணம்பெறவீரசே னன்மகள், தேக்கியகனவிற் புகன்றருளிட்ட சித்திவிநாயக மணியே. (உக)

மருக்குலாமலர்பச் சறுகுநிச்சலுமுன் மலர்ப்பதத்திட்டு மிக் கேத்திப், பெருக்குமாதவத்தொண் டெனக்கருண்மக்கட் பேறறுவீமன்கௌசிகன்று, னிருக்குமாவனமுற் றருளுப தேச மேற்றுநின்பூசையின் பயனுத், திருக்குலாஞ்சுதனைப் பெறவருளிட்ட சித்திவிநாயக மணியே. (உஉ)

ஓட்டைதோய்மலபாண் டத்தைநாடுனென்ன வோம்பி நாட்கழித்திடா தின்ப, வீட்டையுள்ளுணரப் புரிந்தருள் கபிலன்விழியருள் பெறுமுருக்குமாங்கன், வேட்டைசெய் துறுங்காற் கவிமனைமுகுந்தை விரகமிக்கணையநீக் கிடலாற், சேட்டையன்னுள்சூள் பலித்தல்செய்யிட்ட சித்திவிநாயக மணியே. (உங)

நேர்வழியாகும் பிரமரந்திரந்தோய் நிலையளித்திகல் கொளைம் புலஞ்செய், சோர்வழித்தருள்வாய் முகுந்தை சாபத்தாற் சூழ்குட்டமுற்றுருக் குமாங்கன், நார்வழியுள்ளத் துனைநினைந்துருக நாரதமுனிவனுற் சாபந், தீர்வழியுபதே சித்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (உச)

மருவருட்கடலா முன்னடித்துணைகள் வழிபடுமெ னைப்புவிமீதிற், கருவருட்பதைக்க விடுத்தலென்னருள்வாய் கவுதமன்மனைநல மயின்றுள், ளுருவருப்புறுதீ தடைமக வான்முன் னணிக்கதம்பாரணி யத்திற், றிருவடிப்பூசை கொண்டருளிட்ட சித்திவிநாயக மணியே. (உரு)

முரண்புகுமனத்தே னுபினுந்தெய்வ முதல்வநின்றிரு வடிகட்கே, சரண்புகுந்தனனுண் டருள்கதம்பவனத் தடம் படிந்துன்னையர்ச் சித்துள், ளரண்பெறுமன்பிற் றருப்பை மூழ்குவித்தே யணைவிமானத்தவன் பதியோர், திரண்முழு திசையுன் னுலகமைமயிட்ட சித்திவிநாயக மணியே. (உசு)

பொருத்தமோர்சிறிது மற்றவருறவாற் புழுங்குவேன் றன்னைமெய் யின்பத், திருத்துநாளுளதோ வுருக்குமாங்கத ஞெத் திந்திரன்முகுந்தையைக் கூடக், கருச்சமைந்துருவாங் கிருச்சமதன்றுன் கணுனுந்துவாமந்தி ரத்தாற், றிருச்சமை யுருவேற் றிடவருளிட்ட சித்திவிநாயக மணியே. (உஎ)

தாரமு மகவுஞ் சுகமுறக்கருதிச் சகத்திலெய்த்தே னுனை நிமிட, நேரமுங்கருத வொழிவிலேன்பிறப்பி னிலைமை தேர்ந் தயர்கிருச்சமதன், வீரமாதவமெண் ணுயிரம்வருடம் விளைத்திட விளங்கிப்பல் வரமுந், தீரமார்பலியாஞ் சுதனு நல்கிட்ட சித்திவிநாயக மணியே. (உஅ)

மூவலில்கருணைச் சச்சிதானந்த மூர்த்திநீபூர்த்தியா யடியே, னுவன்முற்றுன்மீ தமையவைத்தருள்பன் னைஞ்சகத் திரவரு டங்க, ளோவறத்தவஞ்செய் பலிக்குவேண்டியபே றுற்றிடவும்பர்கள் வணங்கச், சேவகத்திரிபு ரந்தருமிட்ட சித்திவிநாயக மணியே. (உகூ)

நயமுதற்காட்டி யுறவுகொண்டதன்பின் ஞாளியிற்சீற் றமே காட்டிப், பயமுறப்புரிபா தகருறவொழிப்பாய் பலி நினைத்திடத்திரி புரமும், வியமுறுஞ்சுதர்மூ வருமளித்தென் றும் விண்மண்பாதலத்தவர் போற்றுஞ், செயமுறக்கூட்டி யருள்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௩௦)

நாவைவேட்டிசைவாம் பாவையேற்றுனது ஞானவா னந்தவான் சகுணச், சேவைகாட்டிடுவாய் பலியினுல்வருந்துந் தேவர்செய்பூசையேற் றுள்ளத், தேவைபெற்றிடமுப் புரன் புடைபோந்து சிவன்கைச்சிந்தாமணி நாமத், தேவைநல் கெனப்பூ சுரனிற்கேளிட்ட சித்திவிநாயக மணியே. (௩க)

புறங்கடைநிற்கு மறமெலாநிறைந்த புன்மையர்க்கர சென வஞ்ச, வறங்கடைநின்ற மனத்தனைத்திருத்தி யாள் பவருனையல தெவரே, நிறங்கடைசூலப் படையரன்றன்முன் னோர்ந்துமுப்புரஞ்சுடு மறையின், திறங்கடைப்பிடிக்க வருள்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௩உ)

விரிதநுகரண புவனபோகத்தில் வினையனேன்பெருத தொன் றிலையுன், பரிபுரத்திருத்தாட் டுணைகளேயடையாப் பாக்கியப்பாக்கியம் பணிப்பாய், தரிசிந்தாமணியின் றெனச் சினத்துடனே சமர்செயவரவெதி ரணைந்து, திரிபுரமழிக்க வரற்கருளிட்ட சித்திவிநாயக மணியே. (௩௩)

திப்பியவமுதச் சுவைபொலிதருநின் சீர்த்திகள்செப்பி டேன் வினவேன், கைப்பியன்றிடுபேய்ச் சுரைநிகருலகக் கதைசொலக்கேட்கவெக் களிப்பேன், துப்பியல்வடிவேன் ஞானபண்டிதனுஞ் சோதரன்வினவிடச்சிவன்முன், செப்பிய விரத மகிமைசாலிட்ட சித்திவிநாயக மணியே. (௩௪)

நவரசப்பெருக்கஞ் சாரருந்தமிழ்ப்பொன் னகைமிசை நகைமிகைமணியை, யுவமைகொளுஞ்சீ ரமைத்தனன்பூட்டி யுவந்துநோக்கிடப்பணித் தருள்வாய், தவமலையரசாந் தந்தைபால்வினவிச் சங்கரிசதுர்த்திநோன் பியற்றிச், சிவபிரான் மணங்கொண் டிடப்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௩௫)

கருத்தமைந்துயிர்க்கா ருயிரெனக்கலந்த கடவுணீயென் னுளங் கலக்கும், வருத்தமுற்றுணரார் போலுறுந்திறத்தால் வருத்தனன்பிழைபொறுத் தருள்வாய், கருத்தமப்பேர்மன் னவன்முனுள்விரதங் கவின்றமந்திரசெப மியற்றத், திருத்த மிக்கெவையும் பெறப்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௩௬)

சுரர்பெறவிரும்பும் புவிப்பிறப்பருமை சூழ்ந்திலேனுய் நரி கழுகின், றிரளெனவூன்வேட் டுண்டுழல்வாரைச் சீலமார் சுற்றமென் றுவந்தேன், விரிபுகழ்க்கவுட மன்னனைச்சதுர்த்தி விரதநோற்றிசைநள ஞக்கித், திரவுணர்வுடன்வீ டுறப்புரி யிட்ட சித்திவிநாயக மணியே. (௩௭)

விரும்பியவனைத்து மக்கணத்தளிப்பான் விலகிடாதென் னுளத் தினிலுள், ளரும்பியவருளோ டுற்றமாண்பறிய வருள்சந்திராங்கத னுரகக், கரும்பியன்மொழியார்க் குருகி டாதுறுங்காற் காதலிசதுர்த்திநோன் பியற்றத், திரும்பியங்க வள்பா லுறவருளிட்ட சித்திவிநாயக மணியே. (௩௮)

தகித்துடலுயிரைப் பாலைதோய்புழுவின் றன்மைசெய் காமநோய் கொண்டு, சுகித்துவப்புறுவான் றொடங்குமென் மனத்தைச் சுட்டொழித்துறவருள் புரிவாய், வகித்தமாயூரே சத்தலத்திளையோன் வழிபட்டமகிழ்ந்தெதிர் தோன்றிச், சிகித்துவசப்பே ரளித்தருளிட்ட சித்திவிநாயக மணியே.

பனித்தடமலரும் விழிகொளானந்த பாட்பமும்பெய்து நின் புகழ்ச்சீர், தொனித்திடத்துதிசெய் வித்தென்மானிட மாந் தொல்லுருநல்லுரு வாக்காய், தனித்தவேள்மாயூ ரேசத் திற்போற்றச் சார்ந்துநீபிரத்துய்ம னென்னச், செனித்தி கண்ணன்பா லென்றருளிட்ட சித்திவிநாயக மணியே. (௪௦)

உரிவைநீத்திடுவெம் பணியெனக்கன்ம வுடலகன்றிடு சித்தி யோக, விரிவையானெய்தப் புரிதிசம்பரன்பால் வெஞ் சமர்புரிமகற் காணு, வரிவைவேல்விழிருக் குமணிமெய்ச் சதுர்த்தி வரவிரதஞ்செய்கா லிரதித், தெரிவையொடவன் வந் திடப்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௪௧)

மன்னியபோன் புற்றிலேமெனினும் வள்ளலுன்னடி யனு மென்னை, யன்னியர்போலெண் ணுதருள்புரிவா யாதி சேடன்றருக் கரன்றேர்ந், துன்னினர்மோதி டப்பிரவாளத் துனைத்தொழக்கச்செனக் கொண்டு, சென்னியிலரன்கொண் டிடவருளிட்ட சித்திவிநாயக மணியே. (௪௨)

அப்பியமெலழுத்தொப் பானமெய்மெய்யென் றங்களித் துறுமத மாவை, யொப்பிடத்திரிவேற் கிரங்குவிப்பிரத னுனர்வுறக்கடைகணேக் கருளிக், கப்பியன்றுலவை தளிர்க் வைத்தவிர்கைக் கரகநீரான்முகக் கையுந், திப்பியமுக்க லனிற்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௪௩)

ஆவன்முத்தமெனக் களித்திடிற்கைமா ருகநீவாய்மலர்ந் திடுகுற், றேவன்முற்றியற்று வேனெனமாதர்க் கிசைத்து வப்புறுத்துவேற் கருள்வாய், தேவன்முற்செய்மா தவப்புரு சுண்டி தெரியவந்தருளினுன் மகிமைச், சீவன்முத்தனெனப் புரிந்திடுமிட்ட சித்திவிநாயக மணியே. (௪௪)

செம்பிசைகளிம்பு போன்றமூலமலச் சிமிழ்ப்பினின் றெனையெடுத் துன்ருள், நம்பிசையன்பர் நிலையருள்வாய்நா ரதன்யமபுரத்திடை யேகிக், கும்பிவீழ்தமர்நீர் புருசுண்டிக் குணர்த்தக் குயிற்றுசங்கடசதுர்த் திநலத், தெம்பிசைவால் வான் புகுத்திடுமிட்ட சித்திவிநாயக மணியே. (௪௫)

வன்மமுற்றின்ன மெனையலைக்காதுண் மன்னுபேரருளி லுன் றெய்வ, மன்மமுய்த்துணரப் புரிந்தருள்வாய்சா மப் பெயர்கொண்டுபா வத்தாழ், கன்மனக்கொடியன் செத்த தன்புதல்வன் கணேசப்பேரோதமன் னவனுஞ், சென்ம *நெய்ப்பேர்வீ ரினியலாக்கிட்ட சித்திவிநாயக மணியே. (௪௬)

---

* நெய்—கிருதவீரியன்.

கோரியசித்தி யளித்துவீட்டினும்பின் கூட்டிடுவாய் பாரத் துவாசன், வீரியத்தாம்பூ மகன்செவ்வாய்தவத்தால் விரியருட்சேவைதந் தின்பங், கூரியற்சுரரி லமிழ்துகொண் டொன்பான் கோளிலொன் றாய்த்தன்னுண் மாசி, சேரியற் சதுர்த்தி நலந்தருமிட்ட சித்திவிநாயக மணியே. (சஎ)

மகத்துறுசனிபோன் றடிக்கடியென்பான் வருமறதிப் பகை போக்கி, யகத்துளூன்றுளூன் றுதிகயிலாய வவையி டைநகைபுரி மதியை, யிகத்தினின்மறைக டெரிபவரிடரெய் துகவென்றுண்டமரர்வேண் டிடலிற், செகச்சிங்கச்சதுர்த்தி யளவிற்செய்யிட்ட சித்திவிநாயக மணியே. (சஅ)

சிரமிசைகுவித்த கையுடனழலிற் சேர்மெழுகென்வென் புருக, வுரமிசைகண்ணீர் பாயநல்கிடுநா ளுண்டுகொல்சசிபுரி தவத்தால், பரவுசங்கட்ட சதுர்த்திப்பின்பூசை பற்றவும்பெ யர்முன் பாலச்சந், திரனெனக்கொளவு மிசைந்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (சகூ)

கவந்திகழ்மரணம் பிறப்பெனுமவத்தை கடத்திமெய் யின்பவீ டுதவுந், தவந்திகழ்ஞான மீந்தருளவந்தி சார்ந்த மன்னவன்மனை மறையோன், அவங்கொள்சாபத்தில் விடை காம்புலிச்சி யாயறுகுன்மெய்மேற் கொண்டு, சிவம்பொலி வீடு பெறவருளிட்ட சித்திவிநாயக மணியே. (ருo)

ஓர்ந்தமையுணர்வு கொண்டுணர்வார்தம் முள்ளமீதொரு கணப் பொழுதும், பேர்ந்திடாதிசைநிற் கண்டமைநிலைமை பெறவருளியமன்வீ ரியநின், ருார்ந்தமையனலா சுரனையுண்டி டுவெப் பனைத்தினுமரு துயர்ந் தறுகாற், றீர்ந்துமெய்கு ளிர்ந்த மகிமைதோயிட்ட சித்திவிநாயக மணியே. (ருக)

இயங்குதனிலைத்த வாந்திணைவகையி லியான்பெருப்பி றப்பிலை நின்றுண், முயங்குபேரின்ப வாழ்வருள்சனகன் முன்மறைச்சிறுனெனப் பசியின், மயங்கியங்கரப் பொருண் முழுதுண்டு மாறிடாதுறுதிரிசிரசின், செயம்பொலியறுகுண் டொழிந்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (ருஉ)

புளியுறுபழம்போன் றிவ்வுடலத்திற் பொருந்திநின் றுன்றிரு வடியா, மொளியினுள்வெளியாம் படியருள்புரியா னுறும்பிரமமெனுமச் சனகற், கெளிதினிற்சகச நிலைகடைக் கண்ணு லெய்துமாறளித்தவன் சித்தந், தெளியுமெய்ச் சீவன் முத்தனுக்கிட்ட சித்திவிநாயக மணியே. (ருங)

கருச்சளந்தவிராக் காயமார்மாயக் காதலைநின்பதாம் புயத்தி, லிருத்துவாய்சரணங் கவுண்டின்னியப்பே ரிசை தவன்மனைவியா சிரையை, யருச்சனையறுகொன் றுக்குவிண் ணளகை யமைபொருண்மூவரு நிகராத், திருச்சமைமகிமை பொருத்திடுமிட்ட சித்திவிநாயக மணியே. (ருச)

கோங்குமோதயரும்பு கடுத்திடுபுளகக் கொங்கையான் மயக்கிடு மடவார், போங்குறுமனத்தைத் திருத்துசாம்பன் றற் புத்தியாமரசன்மந் திரியாந், தாங்குசண்டாளர் தாம் விளையாட்டிற் சரணமென்றுனைத்தொழுஞ் செயலைத், தீங் குதகிக்கோர் வடைவைசெய்யிட்ட சித்திவிநாயக மணியே. ()

அழுந்துமெய்ப்பத்தி மிகுந்துணைவழிபா டாற்றிலே னெனினுமுன் றிருமுன், விழுந்தெழுந்தேத்து மாண்படு செய்கை வீண்படுமோவிள்வாய் வன்னிக், கொழுந்தடி பொருந்துன் முடிவிழவேறுங் கொடியவல்லரக்கன்வே டனுக் குச், செழுந்தகையுலக மிட்டருளிட்ட சித்திவிநாயகமணியே.

கயம்பெறுமனத்தேன் செய்கையுங்கதியுங் காண்கிலேன் கலங்கினேன் னுயர்சின், மயம்பெறுதிருத்தாண் முடியமை வன்னி மரநிழலூடமைத் துன்னை, நயம்பெறுபூசை புரியரி தனக்கி ரணியன்றன்வர முழுதழித்துச், செயப்பெறும் விதஞ்சொல் விண்டுபேரிட்ட சித்திவிநாயக மணியே. (ருஎ)

காமமுஞ்சினமும் பாவமும்பழியுங் காணியாக்கொண்ட வென் மனத்தில், நேமமுந்தியபே ரின்புறுஞ்சகச நிட்டை யுற்றிடவருள் புரிவாய், வாமனர்பூசித் திந்திரன்பதவி வழங் கிவிண்மண்ணளந் தடிதோய், சேமமாவலிக்கீந் திடப்புரி யிட்ட சித்திவிநாயக மணியே. (ருஅ)

நீர்த்தலையெழுத்தொத் தழியுடலிதனை நிலையெனக்கரு துபு வறிதே, பார்த்தலையுழன்றே னென்னையுன்கடைக்கண் பார்த்தலையாதுவைத் தருள்வாய், கீர்த்தியாமாது வன்னியர்ச் சனைக்குட் கிருபையுற்றவட்கிறை நண்புஞ், சீர்த்திசான்மகவு மீந்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (ருகூ)

நரவடிவாலெய் திடும்பத்திஞான நண்ணிலேற்குண்மை யீந் தருள்வாய், பிரபைமாற்றுந்தாய் நஞ்சிடமடிகிப் பிரப்பிர சாதனற் கவன்றாய், வரமலிவன்னி யர்ச்சனைப்பயனை வழங்கு வித்தவிர்கிருச் சமதத், திரமுனிவரனூற் பிழைத்தல்செய் யிட்ட சித்திவிநாயக மணியே. (கூo)

பொய்விடாவுலகைப் பற்றிடுமாயப் புலன்விடானெனச் சினந் தென்னைக், கைவிடாதுன்பொற் கழலருண்மகிமைக் கவின்புருசுண்டியைப் பார்த்துள், நைவிலர்நகைசெய் சமிமந் தாரற்கு நன்மரத்துருவுறச் சாபந், தெய்விகச்சிறப்புற் றிட வருளிட்ட சித்திவிநாயக மணியே. (கூக)

அவத்தையாமமகா ரப்பொருட்பெருகி லகமகிழ்ந்தஃ தொழி காலத், தவத்தினிற்கிலேச முற்றுவாடுறுமென் னவிச்சைதீர்ஞானவாழ் வருள்வாய், தவச்சவுனகன்முன் சமி மந்தாரக்கீழ்த் தங்கெனைத்தரிசிப்பார்க் கெல்லாஞ், சிவத்த கைப்பயனல் குதுமெனுமிட்ட சித்திவிநாயக மணியே. (சுஉ)

மெய்தளர்ந்துறுகோற் றுணைபெறுமுன்னுன் விரை மலர்ப்பதத்துணை பற்றி, யுய்தவம்புரியப் பணித்தருள்வேள் வியுணர்த்திலன்பிரமனுற் றிடவுள், நைதலார்சாவித் திரிசுரர் புனலா நண்ணச்சொல்சாபம்வன் னிகொடு, செய்தவர்ச் சனையா லறவருளிட்ட சித்திவிநாயக மணியே. (சுங)

பொத்தியதியக்க மலபரிபாகம் பொருத்துபுசத்திநி பாதம், ஒத்தியலச்செய் தருள்கிருச்சமத ரேதுபதேசஞ் சேர் கீர்த்தி, புத்திரன்காசித் துண்டிகணேசப் பேர்கொணிற் போற்றலா லுவந்து, சித்திமுத்திப்பே றுறவருளிட்ட சித்திவிநாயக மணியே. (சுச)

பிறந்தவிப்பிறவி கொண்டினிப்பிறவாப் பெருநலம்பெற மணிக் கதவந், திறந்தருளுண்டைக் காட்டுவாய்பிரமன் செப்பியற்சங்கட சதுர்த்தி, மறந்தவிர்பிதுர்தே வன்சுதன் றெளிய வரைந்திடக்கிருதவீ ரியனுற், சிறந்தபார்மனிதர் பெறவருளிட்ட சித்திவிநாயக மணியே. (சுரு)

கல்வடிவதனிற் கலந்தருள்கருணைக் கடவுணீகடைய னேன் மனத்திற், புல்வதற்குரிமை யுண்டிசைந்தருள்வாய் போற்றுமத்திரியினுற் சதுர்த்தி, நல்விரதஞ்செய் கிருத வீரியன்ற னன்மனைவயிற்றினில் வீரச், செல்வனைவருமா றருளித்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (சுசு)

கோயிலாக்கொண்டென் மனத்தினுளென்றுங் குடியிருந்திடவுமிங் கடியேன், ருயிலாப்பிள்ளை யொத்தனுனது தரிசனமருள்புரி தவத்தா, லாயிரங்கரங்கள் கார்த்தவீரியன்ரு னமைதரவருளியன் னவன்செய், *சேயிசை பவள வடிவிலாமிட்ட சித்திவிநாயக மணியே. (கூஎ)

முருடனைப்பாவ மூர்க்கனைஞான மோட்சமார்க்கம் பெறப் புரிவாய், புருடனைமாய்த்த சுந்தரிபாவப் புலையுருக்கொடுசதுர்த் தியினா, லருடனைப்பெறுவார் சேடமுண்டுன்பே ரறையமூவிசைவிமா னத்துன், றெருடலையுறுபேருலகருளிட்ட சித்திவிநாயக மணியே. (கூஅ)

ஊனுமெய்ப்பூணும் பெறுவதேபெறென் றுழன்மடமாதரை யுவந்து, பேணுறுதொழிலே னுன்னடிகூடும் பெற்றியே துற்றகுட்டன்கண், காணுறவிழிந்த விந்திரவிமானங் கனதவப்புலைச்சிகண் ணேக்கச், சேணுறத்தானே யெழப் புரியிட்ட சித்திவிநாயக மணியே. (கூகூ)

கோரமாமனப்பேய்க் கூத்தினிலென்னைக் குமைத்திடுகன்மமற் றின்பார், வீரமாதவமே புரியச்செய்சதுர்த்தி விரதநல்வசிட்டனைக் கொடுசெய், சூரசேனப்பேர் மன்னனையுனது தொல்லுலகத்தமை மாட்சி, சேரவான்விமானம் வரப்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (எ௦)

எட்டியபிறவி யெதினுநின்பேரன் பீந்தருண் முன்பிராமணனுப், பெட்டிடுபாத்தை காதன்மிக்கின்ற பிதாவன்னை மனைவியைக் கொன்று, தொட்டியற்சுலபை கரமவள்சாபத் தொடக்கிலிப்பவத்துங்கொள் குட்டச், செட்டியால்விமானந் தடைபுரியிட்ட சித்திவிநாயக மணியே. (எக)

---

* சேய்—சிவப்பு.

எள்ளிலெண்ணெயைப்போற் பிரிவுறாதென்னு ளிருந்த நின்றிருவரு ளறியேன், றுள்ளியமனப்பே யுறவமைந்த வமே சுழலெனக்கரு ளிக்குட்டனைக்கீழ்த், தள்ளிடாதருள் கென் றிறைசொலக்கணநின் றன்பெயர்மூவிசை யோதித், தெள்ளியனுநின் னுலகிலேற்றிட்ட சித்திவிநாயக மணியே. ()

ஆவியையுடலைப் பிரித்துவேறுநின் றமைதருமறிவினு லுனைக்கண், டோவியம்போன்றுற் றிடவருள்குரவர்க் கிறுதி செய்கார்த்தவீரியனை, மூவியன்மூவேழ் குலந்தெறும்பரசு ராமற்கிட்ட டில்சிரஞ், சீவியாயின்று முறப்புரியிட்ட சித்திவிநாக மணியே. (எங)

விரத்தியுளின்றி மேலிடும்வேட வேடனையாண்டரு ளிலங்கா, புரத்திறையிலிங்கம் பெருதிடையூறு புரிந்துகோ கன்னமென் ருக்கி, யுரத்தினிற்குட்டப் பந்தடித்திடல்போன் றலைவுசெய்தவன்பணிந் தேத்தச், சிரத்தினிற்குட்டி வணங் கென்றுளிட்ட சித்திவிநாயக மணியே. (எச)

விடமுடியாமற் றெடமுடியாமல் வீணுலகத்துளாந் துன்பம், படமுடியாமல் வாடுமென்றனைக்கண் பார்த்தருள்கா ழியிற் போகி, கடமுடியாமற் குடமுனிகரகங் கவிழ்த்தவன் குட்டமெய் காட்டித், திடமுடியாப்பல் வரந்தருமிட்ட சித்தி விநாயக மணியே. (எரு)

தாயெனத்தந்தை யெனக்குருவென்னச் சார்ந்துவுஞ் சராசர முழுதும், நீயெனக்குறிக்கும் நிலையெந்நாளருள்வாய் நெடுந்தவக்காசிப னுலகிற், காயெனத்திகழ்பற் பலருமுன் காணக் கசியபநந்தனப் பெயர்தோய், சேயெனவருகென் றிடவருளிட்ட சித்திவிநாயக மணியே. (எசு)

விரிசனனப்பே ராழியிலாழ்த்தும் வினையொழித்துன் றிரு வடிதோய், பரிசனர்நிலைநல் கிடுதிகாசிபனுற் பத்தி செய்வார்பத்தி செய்யத், தரி* சனற்கார வடிவமவ்வவர்க் குந் தனித்தனிநினைத்தமை விதம்போல், தெரிசனமளித்து வரமருளிட்ட சித்திவிநாயக மணியே. (எஎ)

ஒப்பியதவக்கா சிபனளித்திட்டோ ருரைத்தருள்சுமு கரே கதந்தர், தப்பில்சீர்க்கபிலர் கசகன்னரிலம்போ தரர் விகடர்விக்ன ராசர், கைப்பிலாக்கணநா யகர்தூமிரகேது கணுத்தியக்கர்பால சந்த்ரர், செப்பியகசான னப்பெயரிட்ட சித்திவிநாயக மணியே. (எஅ)

தபித்துமாயை யினிற் றட்டழிந்துறுமெய்த் தவம்பு ரிந்துலகிடத் திசையும், நபித்தகைஞான மளித்தருள்வாய் நின் னளினநாண்மலர்ப்பதத் துணையே, அபித்தியானஞ் செய் திட்டுநின்னும மாயிரத்துடன்மூவே ழன்பிற், செபித் தருச்சனைசெய் வார்க்கருளிட்ட சித்திவிநாயக மணியே. ()

கருவவாரிதியாழ் கொடியர்சொப்பனத்துங் காணரி தாகுமுன் மெய்தோ, யருவமோடுருவ முபயமிம்மூன்றி னநுபவமும்பெற வருள்வாய், உருவயிற்கரத்தோன் வின விடப்பரம ஞேதியபன்னிரண் டான, திருவவதார மேற் றருளிட்ட சித்திவிநாயக மணியே. (அ0)

மெய்க்கிரகங்க ளொன்பதின்பயனுய் மேவிடுமின்பதுன் பந்தீ, ருக்கிரத்தவத்தி லிசைதருமுண்மை யுணர்வையானுற் றிடப் புரிவாய், வக்கிரதுண்டப் பேர்கொடுபிரமன் மாலுருத் திரர்க்குமுத் தொழிலாற், றிக்கிசைசீர்த்தி யளித்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (அக)

---

* சனற்காரம்—ஆபரணங்களினேசை.

அணிமணிப்பணியூ ணுடைப்பொருட்டலையா தயனரிய ரன்றெழு தேத்துன், பணிபுரிந்திடுவான் பணித்தருள்கபிலன் பாலமைந்திச்சைமுற் றருளுந், தணிவில்சீர்ச்சிந்தா மணிகொளுங்கணனைத் தாக்கவேள்வியிலன்னை மார்தோய், திணிபுரத்துடன்வந் தருள்புரியிட்ட சித்திவிநாயக மணியே (அஉ)

மருக்கமழ்மலர்நின் பதத்திலிட்டிருகண் மாரிபெய்துயிருடம் பனைத்து, முருக்கருண்மகிமைத் துதிபுகன்றிடுமாறுவந்தருள்கணமகன் மடியத், தருக்கறுமடிசித் தருன்மணி கபிலன் றந்திடவருளணி மாண்பார், திருக்களத்தணியுமகிமைதோயிட்ட சித்திவிநாயகமணியே. (அ௩)

அன்னியமென்ப தின்றிநாயேனென் னகப்புறக்கருவிகளுடனே, பின்னியவுண்மை காணிலென்மீதோர் பிழையுளதேகொல் சிந்தூரன், முன்னியல்வான்வாக் குணர்ந்திகலாங்கான் முளைசெகுப்பேனென்று கருவின், சென்னிகொண்டிடவுற் பவித்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (அச)

சரமிசைகழைவில் லேந்துறுதுட்டன் சமர்த்திறச்சமர்த்தினுக் குடையா, வுரமிசைதரநின் றிருவடிமலரென் னுச்சிசூட்டுதிமயேச்சுரன்றன், வரமிசையுத்த மாங்கமிங்கரனுல் வழிபடவுற்றுள ததையென், சிரமிசைதரச்செய் குதிரெனுமிட்ட சித்திவிநாயக மணியே. (அரு)

இச்சையைச்சுத்தி செய்தவர்தெய்வத் திடம்புகுவாரென மேலோர், பச்சையாயுரைத்துங் கேட்டமைகில்லேன் பகைகொள்சிந்தூர னுண் ணடுங்கக், கச்சையாச்சேடற் கொண்டருள்வடிவங் காட்டியங்கவனுருக் குழைத்துச், செச்சையாய்மணக்கப் பூசியவிட்ட சித்திவிநாயக மணியே. (அசா)

இனித்தடையின்றி யினித்தடையுன்று ளெண்ணிநெக் குருகியென் ஞளுநந், தனித்தடையோக வாழ்வளித்தருள் வாய் தவவரேணியன்மனை வயிற்றின், மனித்தமெய்யுருச் சேய் மறைத்துவாரணத்தின் வதனமோடங்கெழூந் தருளிச், செனித்தபாலகனைப் போலமைமயிட்ட சித்திவிநாயக மணியே.

அறமறந்துறுபொய் மறநிறைந்திடச்செய் யக்கிரமக்க லிக் கொட்ட, மறவருள்புரிவாய் பார்சுவர்மனைசேர்ந் தருளி ஞற்சவுரிசாபத், திறமுறுமூடி கத்திவர்ந்திடரே செய்யும்விக் கினுளச் செருக்கின், றிறலைமாற்றுபுசாந் தம்புரியிட்ட சித்தி விநாயக மணியே. (அஅ)

பகிர்முகத்துற்ற பொருள்களினீங்காப் பற்றமைவுற்ற வென் மனத்தைச், சுகிர்தமிக்கமையுன் பதத்தமைந்தென் றுந் துயிலவைத்தருள்சங்கன் மறையை, விகிர்தமாய்மறைப்ப விளக்குபுகமலன் விண்புகவேள்வியிற் ருேன்றும், சிகியிவர்ந் தமராற் றுபுதெறுமிட்ட சித்திவிநாயக மணியே. (அகூ)

இயமமாதியவட் டாங்கயோகச்சீ ரிசைத்தருளுமைவயி ஞறு, புயமுறுசேயா யளவறுமாடல் புரிந்திமையோர்களை யெல்லாம், பயமுறுசிறைசெய் சிந்துவைத்தடிந்து பசுமயி லூர்ந்தலி ஞற்பிந், தியமயூரேச ஞயவிரிட்ட சித்திவிநாயக மணியே. (கூ௦)

காவரும்பியபூ மாலையுமதுரங் கவின்றெதுநாளினும் வாடா, நாவரும்பியபா மாலையுஞ்சூட்டி நானுனைவணங்குமா றருள்வாய், தாவருங்கனலா சுரனையுண்பால சந்திரனுகித் தூர் வையினிற், றேவராதியர்ர்ச் சனைபெறுமிட்ட சித்தி விநாயக மணியே. (கூக)

போதவந்தனிற்போக் குப்புவிக்கிடரே புரிந்தவத்துழ லுமென் றனைநின், பாதவந்தனைத்தொண் டடியவருவக்கும் பணிபுரிவான்பணித் தருள்வாய், மாதவன்சுமுதை பாலனுய்க் கொல்வான் மதித்ததூமனைப்பிலத் தழுத்திக், தீதறுதூம கேதுவாமிட்ட சித்திவிநாயக மணியே. (௬உ)

ஆசமைசகல கேவலமாம்பே ரவத்தையுற்றவத்துழல் வேனை, நேசமுற்றியல்பே ரருட்பெருஞ்சுகத்தி னிலைபெறவி சையுநா ணிகழ்த்தா, யீசன்பாலைந்து முகங்கொடுற்பவித்துள் ளுவப்பினில்வரங்களீங் தருளுங், தேசவிர்கணேசப் பெயரி சையிட்ட சித்திவிநாயக மணியே. (௬௩)

நத்தியவரங்கள் யாவையுமெனக்கு நல்கிமுத்தியுமளித் தருள்வாய், பித்தியிற்பொறித்த பிரணவமறையாண் பெண் ணுருவாய்கலங் தியல்சீர், சத்தியுஞ்சிவனு நோக்கினரமை காற் றயங்குபேரொளிவடி வாய்த்தோய், சித்தியார்கணப திப்பெயரிட்ட சித்திவிநாயக மணியே. (௬௪)

பகுத்துணர்வளித்தைம் புலனெழித்துனது பாததாம ரைத்துணை யொளியுட், புகுத்துவதுனது பாரமேயுமைவாய் புகன்றசாபத்தினி லரிபாற், றெருகுத்தபாம்புருவ நீக்குபு தேவர் துயரறக்கயமுகாசுரனைச், செகுத்தவான்கொம்பொன் றிசைதருமிட்ட சித்திவிநாயக மணியே. (௬௫)

இகழ்புகழின்ப துன்பமாதிகளை யெண்ணிடாதுண் ணிறை தவத்தா, லகழ்தரப்புரிவாய் காசிபன்மனைவி யதிதி செய்பெருந்தவத் திரளாய், நிகழ்திருமேனி கொண்டுயிர்க் கெல்லா நிலையருட்சுகமுளத் துதிப்பத், திகழ்மகோற்கடரா யுதித்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (௬௬)

வரையிசையமுதந் தேக்குகண்ணனைப்போல் வரையறு சித்திக ளியற்றித், தரையும்வானகத்து மிசைநிறுத்துனது தாண்மலர்பெறவருள் புரிவாய், கரையறுமாட லியற்றித்தே வாந்த கன்னராந்தகனைமாய்த் தணியார், திரைகொள்கங்கைக் காசியிலிசையிட்ட சித்திவிநாயக மணியே. (கஎ)

சாவதும்பிறப்ப தும்புவிவிண்பா தலங்கள்சார்தருக ரணங்க, ளாவலாம்போக மநுபவிப்பதுமே யாந்தொழிலறப் புரிந் தருள்வாய், காவலன்மைந்தன் மணமுடித்துற்ற காசிப னதிதியும் போற்றச், சேவலானந்த புவனந்தோயிட்ட சித்தி விநாயக மணியே. (கஅ)

செக்கிசைதிலமே போன்றுமும்மலத்திற் சிமிழ்ப்புறு சிறியனே னுளத்திற், சக்கினிலகலா தமைந்தருளிமை யோர் தமைத்துயர்புரிதுரா சதனை, வக்கிரதுண்டப் பேருட னுமையாள் வயினுதித்தடிகொடு கீழத், திக்கினிலாழ்த்தி ஞானநல்கிட்ட சித்திவிநாயக மணியே. (கக)

விரித்தலுமுலகைச் சுருக்கலுமனத்தின் வேட்கையே யென்னமே லவர்க, ளுரித்தமைந்தருண்மாற் றத்தையுய்த்து ணரா துழலெனைக்கழனிழற் கூட்டாய், பரித்தசீர்க்காசித் திவோதானன்மனத்தைப் பரகதியடைவுறும் வண்ணந், திரித்தருளுடுண்டி நாமமாரிட்ட சித்திவிநாயக மணியே. ()

கிளைத்தசங்கற்ப விகற்பமுற்றகன்று கேடிலானந்தவா ரிதியில், விளைத்தபேரமிழ்தம் புசித்திடவருள்வாய் விட மணிமிடற்றனே யுமையாம், வளைத்தடக்கைவல் லவை யுடன்மாயோன் மக்கள்பன் னிருவரை மணந்து, திளைத்த வல்லபைகணேசராமிட்ட சித்திவிநாயக மணியே. (கoக)

தேவையாம்பொருள்க ளெனக்கிகமீதிற் சிந்தையில் வேட்டவா றளித்துப், பூவைநேருன்றுட் புகலிறுதியினிற் புகவருள்விநாயக கீதை, மாவைகுமுரத்தற் கருளியின்பமை சின் மயவிசுவரூபமெய்க் காட்சிச், சேவைமாட்சிமைச்சீர் வழங்கியவிட்ட சித்திவிநாயக மணியே. (௧0௨)

வளிபுனலனலா மூன்றிலாமுடலை மதித்தொருநானெ னச் செருக்கிக், களிபெறுமனத்தே னநித்தநித்தியச்சீர் கண்டுருகிடவருள் வியாசற், கொளியுருச்சேவை காட்டு புராண முபபுராணங்களா தியசொல், தெளிவுதோய்வரங்க ளீந்தருளிட்ட சித்திவிநாயக மணியே. (௧0௩)

நாமமோடுருவம் பெறுபுகழ்போக நாடிவீணுட்கழிப் பேனுள், ளோமயப்பொருளா முன்மயம்பொருத்தா யுன் கதைபிருகுவாய்க் கேட்ட, சோமகாந்தன்சேய் மனைநகரின் பாற் றேய்ந்துளோர் விமானமூர்ந் துன்மெய்ச், சேமமாருல கம் புகப்புரியிட்ட சித்திவிநாயக மணியே. (௧0௪)

சாக்கிரந்தன்னிற் பொருந்தியதுரியத் தவப்பயன்றந் திட வேண்டிப், பாக்கியச்சரித்தி ரத்துடன்கலந்து பரிந்து பாமாலையென் றிடப்புன், வாக்கியத்துரைத்த கந்தசாமிப் பேர் வயங்கடியேற்கிரு மைச்சீர், சீக்கிரத்தருள்வாய் விள வையூரிட்ட சித்திவிநாயக மணியே. (௧0௫)

சிரவைதோயிராமா னந்ததேசிகன்மெய்த் திருவடித் துணைகளா மின்பப், பரவைதோய் கௌமா ரத்திருத் தொண்டர் பதத்துகண்முடிகொள்சுப் பண்ணன், வரவை போகப்புண் ணியப்பொன்செய்கோயில் வாயிலாய்த்தொழு பவர்க்கெல்லாந், திரவைபோகப்பே றளித்தருளிட்ட சித்தி விநாயக மணியே. (௧0௬)

முற்றிற்று.

சந்தக்கவி.

தத்த தத்தன தானன தானன—தனதான

சித்தி புத்திச மேதா நமோ நம
சத்தி யுத்தமி பாலா நமோ நம
சிட்டருட் பொலி வாழ்வே நமோ நம வருளேதோய்

சித்தி யற்புத லீலா நமோ நம
அத்தி வத்திர நாதா நமோ நம
சிற்பரத்துவ போதா நமோ நம இணையேதீர்

பத்தி மெய்த்தவர் தேவா நமோ நம
அற்புதக் குணவானே நமோ நம
பற்பணிப் பணியானே நமோ நம ஒளியேதோய்

பப்பரத் திருவாகா நமோ நம
அப்பணிச் சடையானே நமோ நம
பற்றழிக்கு மமோகா நமோ நம எனையாள்வாய்

சத்தியத் தவமே நீடு காசிப
னத்திடச் சுதனயாடல் கோடிசெய்
தற்பரத்துவ தாடாள வாரண முதல்வோனே

சக்கரக்கர மாயோனு ளோகைமி
குக்கவற்புத மார்ஞான கீதையி
சைத்த விச்சுவ ரூபாகயானன மிசைகோவே

எத்தியொற்றொட ராசா பிசாசம
றத்துரத்தி மெஞானறு பூதிகொ
ளிச்சை வைத்த தயாவாரியா யவிர் குருநாதா

எத்தனப் படலாமா வல்யாவையு
நத்துநர்க்கிடு தாராள மேவிய
லிட்டசித்தி கணேசா சுராதிபர் பெருமாளே.

வாழி.

விளவையூர் வாழி யிட்டசித்திப்பேர் விநாய [illegible]ம் வாழி, வளமலியுளத் தொண்டடியவர் வாழி வான் [illegible]ம் மறை வாழி, யுளமிசை தவத்தரந்தணர் மன்ன ரு[illegible]ி னர்தமிழ் வாழி, பளகறு நலங்கள் யாவையு [illegible]ம் பார்மிசை வாழி வாழியவே.

தெய்வமே துணை.

பாரதி பிரஸ், கோயமுத்தூர்.